(5) கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. அடுத்து, திரு. சீமைச்சாமி அவர்கள்.

(அ) மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் பருவமழை தவறியதும், துயர் தணிப்புப் பணிகள் துவங்குவது குறித்தும்.

திரு. கரு. சீமைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன் :—

" மதுரை, இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை தவறியதால், மேற்படி மாவட்டங்களில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்."

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" மதுரை, இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை தவறியதால், மேற்படி மாவட்டங்களில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்."

திரு. நா. சௌந்தர பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" மதுரை, இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவ மழை தவறியதால், மேற்படி மாவட்டங்களில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்."

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, 1969-இல் மதுரையில் ஏனைய வட்டங்களுடன் திருமங்கலம், உசிலம்பட்டி, வேடசந்தூர் ஆகிய வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் பெரும்பாலும் வேலை வாய்ப்பு சார்ந்த துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1970 ஜனவரியில், வேடசந்தூர் பகுதியில் உடனடியாகத் துயர் தணிப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முறையீடுகள் பெறப்பட்டன. வேடசந்தூர் பகுதியில் தக்காவிக் கடன்களாக வழங்குவதற்கு ரூபாய் ஒரு லட்சமும், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு இன்னொரு லட்சமும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து மறுபடியும் புதிதாக வறட்சி ஏற்பட்டுள்ளதென்று. அதுவும் முக்கியமாகத் திருமங்கலம், உசிலம்பட்டி, வேடசந்தூர் ஆகிய வட்டங்களைக் குறிப்பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது, கூடுதலாகத் துயர் தணிப்பு உதவியளிப்பது பற்றி வருவாய் வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டுப் பரிசீலனையில் இருக்கிறது.

1969-இல் இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதென்று அறிவிக்கப்படிருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் வேலை வாய்ப்பு சார்ந்த துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2·48 கோடியில் ரூ. 2·36 கோடி துயர் தணிப்பு ஏற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளில் இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்

பட்ட தொகை இரண்டாவது உயர்ந்த அளவுத் தொகையாகும். 1970 ஜனவரியில், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதியில் கடும் வறட்சி நிலை நிலவுவதாக முறையீடுகள் பெற்றதன் அடிப்படையில், தக்காவிக் கடன்கள் வழங்குவதற்காகவும், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும், ரூ. 3 லட்சம் அளிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ வில்லிப்புத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை, பரமக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், முதுகுளத்தூர் ஆகிய வட்டங்களின் பகுதிகளில் தொடர்ந்து வறட்சி நிலைகள் பற்றிச் செய்திகள் வந்துள்ளன ; துயர் தணிப்பு ஏற்பாடுகளுக்கான விரிவான செயற்குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ளார். மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தலைமைச் செயலாளர் இப்போது பார்வையிட்டு வந்து உள்ளார். இது குறித்து வருவாய்த் துறை வாரியத்தின் குறிப்புகள் வந்து சேர்ந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் துணை வட்டம் நாங்குநேரி வட்டத்தில் இருக்கிறது. 1969-இல் இராதாபுரம் துணை வட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது. குடிநீர் வழங்குதல், சிறு பாசனம், சாலைப் பணிகள் போன்ற துயர் தணிப்பு வேலைகளுக்காக, இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 5·73 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டது. 1970 ஜனவரியில் இராதாபுரம் பகுதியில் இங்கும் அங்குமாகக் குறிப்பிட்ட சில பகுதிகளிலும், சங்கரன் கோவில், கோவில்பட்டி, தென்காசி வட்டங்களில் சில பகுதிகளிலும் கடும் வறட்சி நிலை நிலவுவது பற்றிச் செய்திகள் வந்ததின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் தக்காவிக் கடன்கள் வழங்குவதற்காகவும், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும் அரசு ரூ. 2·53 லட்சம் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி, தென்காசி, நாங்குநேரி, ஸ்ரீவைகுண்டம், சங்கரன் கோவில் ஆகிய வட்டங்களில் சில பகுதிகளிலும், இராதாபுரம் பகுதியிலும் கூடுதல் துயர் தணிப்பு ஏற்பாடுகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் செயற் குறிப்புகளை அனுப்பியுள்ளார். தலைமைச் செயலாளரும் பாதிக்கப்பட்ட இடங்களை நேரிற் பார்வையிட்டுத் தாம் கண்டறிந்தவற்றைத் தெரிவித்துள்ளார். வருவாய்த் துறை வாரியத்தின் குறிப்புகளைப் பெற்றவுடன் அவற்றைப் பரிசீலித்ததும் இது தொடர்பான உத்தரவுகள் மிக விரைவில் பிறப்பிக்கப்படும்.

மேற்கூறிய மூன்று மாவட்டங்களிலும், வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அரசுக் கடன்கள், நிலவரி நிலுவைகள் அனைத்தையும் வசூல் செய்வதை ஒத்திப் போடும் வகையில் உடனடித் துயர் தணிப்பு உதவி ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. அரசு நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது ; துயரம் நிலவும் பகுதிகளுக்கு. இவ்வரசு இயன்ற அளவு விரைந்து தன்னலமின்ற உதவி அனைத்தையும் வழங்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவரவர்களே, பஞ்ச நிவாரண வேலைகள் நடந்து முடிந்துவிட்டது. இன்னமும் பஞ்ச நிவாரண வேலைகள் தொடர்ந்து நடக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். தக்காவிக் கடன்கள் 3 லட்சம், 4 லட்சம் போதாது. ஆகவே, தக்காவிக் கடன்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகமாக ஏற்பாடு செய்ய முன் வருவார்களா என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் அதைத்தான் சொன்னேன். இயன்ற அளவிற்கு அரசாங்கம் கவனிக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, ஏற்கனவே மிகக் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள வேடசந்தூர், பாளையம், உசிலம்பட்டி, திருமங்கலம், திண்டுக்கல் போன்றவைகள் இருக்கின்றன. இப்பொழுதுதான் வேடசந்தூர், பாளையம் ஆகிய இரண்டு பிளாக்குகளுக்குத்

தான் நீங்கள் கொடுக்க இருக்கும் கடன் ஒற்றிவைப்பு என்று அனுமதித்து இருக்கிறார்கள். உசிலம்பட்டி, திருமங்கலம், பழனி வட்டங்களில் உள்ள பகுதிகளிலும் கடனை ஒற்றிவைக்கவும், நில வரியை வஜா செய்யவும் நிவாரண வேலைகளுக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால்தான் அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் வாழ முடியுமென்ற நிலையிருக்கிறது. அதற்காக உடனடியாக அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கெனவே சொன்னேன். ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. கடன்கள், நிலவரி எங்கெங்கு கொடுக்க முடியாமலிருக்கிறதோ ஆங்காங்கு கலெக்டர்கள் உசிதம் போல் செய்யலாம். நிலைமைகள் உண்மையாக உறுப்பினர்கள் கூறும் வண்ணம் இருக்குமேயானால், கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்தவித மான ஆயாசமும் அடையத் தேவையில்லை, அச்சப்பட வேண்டிய தேவை யில்லை. எங்கே இந்தமாதிரி உண்மையான நிலைமைகள் இருக்கின் றனவோ அங்கேயெல்லாம் அரசாங்கம் பரிவோடு கவனிக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

(ஆ) குமரி மாவட்டம். குளச்சல் நகரில் மீனவர்கள், வீடுகள் தீக்கிரை யாகி, வீடின்றி தவிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எம். சி. பாலன் அவர்களும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. எம். சி. பாலன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை யின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"குமரி மாவட்டம், குளச்சல் நகரில் உள்ள 156 மீனவர்கள் வீடுகள் 18—3—1970 அன்று தீக்கிரையாகி வீடிழந்து தவிப்பது பற்றி."

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரி யத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"18—3—1970 அன்று குமரி மாவட்டம், குளச்சல் நகரில் உள்ள 156 மீனவர்கள் வீடு தீக்கிரையாகி வீடிழந்து தவிப்பது பற்றி"

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் தாலுக்காவில், குளச்சல் கிரா மத்தில் 19—3—1970 அன்று தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. அதில் 101 வீடுகளும், 5 பண்டக சாலைகளும் தீக்கு இறையாகின. பாதிக்கப்பட்ட வர்கள் பொருள் சேதம் சுமார் ரூ. 1,00,200-க்கு சற்று அதிகமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. உயிர்ச் சேதமில்லை. ஆனால் சில பன்றி களும், வாத்துகளும் தீவிபத்தில் மாண்டன. தலா ரூ. 80 வீதம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்கப்பட்டது. மொத்தம் வழங்கப்பட்ட தொகை ரூ. 8,080 ஆகும். தவிர பாதிக்கப் பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2 படி வீதம் அரசாங்க கையிருப்பிலிருந்து ரூ. 289·74 மதிப்புள்ள அரிசி வழங்கப்பட்டுள்ளது.

திரு. எம். சி. பாலன் : தலைவரவர்களே, இதே போன்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மேல்மணக்குடி கிராமத்தில் 10 வீடுகள் தீக்கு இறையாகி எரிந்து விட்டன. அந்த வீடுகளில் கிட்டத்தட்ட ரூ. 10,000-க்கு